# இராமானுசர் - நாடகம்

## முன்னுரை

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

நாளுக்கு ஒரு முறை மலர்வது சண்பகம். ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது பிரம்மகமலம். 12 ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி. தலைமுறைக்கு ஒரு முறை மட்டும் மலர்வது மூங்கில். அது போல் நம் தலைமுறைக்கு ஒரு முறை பிறப்பவர்கள் ஞானிகள். முத்தமிழின் மூன்றாம் பிரிவான நாடக வடிவில் இராமானுசரைப் பற்றிய நிகழ்வு இது.

## திருமந்திரத் திருவருள்

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

திருமந்திரத் திருவருள் பெறத் தண்டும் கொடியுமாய் இராமானுசரை வரச்சொல்லுங்கள் என்னும் செய்தி பூரணரால் திருவரங்கத்திற்கு அனுப்பப்பட்டது. தண்டு, கொடிக்கு இணையான கூரேசர், முதலியாண்டானுடன் திருக்கோட்டியூர் பூரணர் இல்லத்திற்கு வந்தார் இராமானுசர். பரம ஆச்சாரியார் ஆளவந்தார் அவர்களால் கிடைத்த திருமந்திரத்தை மூவருக்கும் கூறினார். இதனை வேறு யாரிடமாவது கூறினால் உங்களுக்கு நரகமே கிடைக்கும் என எச்சரித்தார்.

## பிறவிப்பிணி தீர்க்கும் மந்திரம்

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

திருக்கோட்டியூர் சௌமியநாராயணன் திருக்கோவில் மதில் சுவரின் மேல் நின்றார் இராமானுசர். பிறவிப் பிணியைத் தீர்க்கும் அருமருந்தான திருமந்திரத்தை அனைவருக்கும் கூறினார். பொதுமக்கள் அனைவரும் அதனை மும்முறை கூறினர். பூரணரின் சீடர் அழைக்க மூவரும் மீண்டும் பூரணர் இல்லம் சென்றனர். உழன்று பேதை வாழ்வு வாழ்ந்து வரும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் பிறவிப்பிணி நீங்கி பேறு பெறவே இம்மந்திரத்தைக் கூறினேன். ஞானகுருவே, மன்னித்து அருளுங்கள். நான் செய்த இரண்டகத்திற்குக் கொடிய தண்டனையான நரகமே கிட்டும் என்றார். உங்களுக்கு இருந்த அருள் உள்ளம் இதுவரை எனக்கு இல்லாமல் போனதே, என்றார் பூரணர்.

## முடிவுரை

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

இறைவனின் திருவருளை உலகிற்கு உணர்த்தியவர் தாங்களே. எம்பெருமான் என்னும் திருநாமம் என்றென்றும் உமக்கு நிலைத்து, நீங்கள் நீடுழி வாழவேண்டும் என்று வாழ்த்தினார். தன் மகன் சௌமியநாராயணனை அடைக்கலமாக இராமானுசரிடம் அளித்தார் பூரணர். பெரிய நம்பிகள் கூறினாரென்று 18 முறை வந்தும் கிட்டாத பேறு இன்று கிட்டியதையும், அதை மக்களுக்குக் கூறியதையும் நினைத்து மகிழ்ந்தவாறு புறப்பட்டுச் சென்றார் இராமானுசர்

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM